


25. 05. 2026

## தலைப்புச் செய்திகள்

- தமிழ்நாட்டில் கடும் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது விரைந்து வழக்கு பதிவு செய்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.விஜய் அறிவுறுத்தியுள்ளார்.
- தூத்துக்குடியில் 12ஆம் வகுப்பு மாணவி பாலியல் கொலை வழக்கில் குற்றவாளிக்கு இரட்டை மரண தண்டனை விதித்து மாவட்ட போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.
- நீட் தேர்வை தன்னிச்சையாகவும், வலுவுடனும் செயலாற்றும் வகையிலான புதிய தேர்வு முகமையை ஏற்படுத்துவது குறித்து மத்திய அரசு பதில் அளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
- தமிழ்நாட்டில் உணவு துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும் என்று மாநில உணவு அமைச்சர் திரு.வெங்கட் ரமணன் கூறியுள்ளார்..
- நார்வே செஸ் போட்டிகள் ஓஸ்லோவில் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

**************

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் கடும் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது விரைந்து வழக்கு பதிவு செய்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், அதுசார்ந்த வழக்குகளை விரைவு படுத்துவது தொடர்பான இன்று நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனை கூட்டத்தில் இதற்கான உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுவது, விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக நடத்தி குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தரப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

குற்ற செயல்களில் ஈடுபட திட்டமிடுவோரை தடுக்கும் வகையில் வழக்குகள் முறையாக நடத்தப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51ஆவது கூட்டம் நாளை புதுதில்லியில் நடைபெற உள்ள நிலையில் இதுதொடர்பாகவும் முதலமைச்சர் இன்று ஆலோசனைகளை மேற்கொண்டார்.

**************

தூத்துக்குடி வழக்கு

தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் கிராமத்தில் 12ஆம் வகுப்பு மாணவி பாலியல் கொலை வழக்கில் குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை மரண தண்டனை விதித்து தூத்துக்குடி மாவட்ட போக்சோ நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இச்சம்பவம் நடைபெற்ற 76ஆவது நாளிலே குற்றவாளிக்கு மரண தண்டனையை விதித்து போக்சோ நீதிமன்ற நீதிபதி ப்ரீத்தா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**************

ராஜ்மோகன்

தமிழ்நாட்டில் வரும் ஜூன் முதல் வார கோடை வெயில் நிலைமை குறித்து வானிலை மையத்திடம் அறிக்கை கோரப்பட்டிருப்பதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அந்த அறிக்கையின் அடிப்படையில் பள்ளிகள் திறப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றார்..

பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும்,

மாணாக்கர் சம்மந்தப்பட்ட எந்த திட்டமும் நிறுத்தப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

போக்சோ சட்டங்கள் குறித்து அதிக அளவில் விழிப்புணர்வு பள்ளிகளில் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**************

ஆதவ் அர்ஜுனா

தமிழகத்தில் திறமையான விளையாட்டு வீர வீராங்கனைகளை கண்டறிந்து தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க தேவையான பொருளாதார உதவிகளை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் இதனை தெரிவித்த அவர், நாள்தோறும் காலை 7 மணிமுதல் 10 மணிவரை சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் விளையாட்டு வீரர்கள் சிரமம் இன்றி தன்னை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டரங்கங்கள், பயிற்சி கூடங்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஒலிம்பிக்கில் பங்கேற்கும் ஆர்வமுடைய இரண்டு வீர வீராங்கனைகளுக்கு 5 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் அமைச்சர் வழங்கினார்.

**************

அருண் ராஜ்

திருச்சி அரசு மருத்துவமனையில் செவிலி உயிரிழந்த விவகாரத்தில் உயர்மட்ட குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கை விரைவில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவறிழைத்தவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு தடையற்ற மின்சாரம் உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாய்ஸ்

**************

பத்ம விருதுகள்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நடப்பாண்டிற்கான பத்ம விருதுகளை இன்று மாலை வழங்குகிறார்.

குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 2 பத்ம விபூஷன், 6 பத்ம பூஷன், 58 பத்ம ஸ்ரீ விருதுகளை அவர் வழங்குகிறார்.

இந்தாண்டு 131 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் முதற்கட்டமாக 66 விருதுகளை அவர் வழங்குகிறார்.

கலை, இலக்கியம், கல்வி விளையாட்டு, சமூக சேவை, மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட துறைகளில் சிறப்பாக செயல்படுபவர்களை கவுரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் பத்ம விருதுகளை மத்திய அரசு வழங்குகிறது.

மருத்துவ நிபுணர் கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி,

சமூக சேவகர் மயிலாந்தன் ஆகியோருக்கு பத்ம பூஷன் உட்பட மாநிலத்தில் 13 பேர் இந்தாண்டு பத்ம விருதுகளை பெறுகின்றனர்.

**************

பெட்ரோல் டீசல்

நாடுமுழுவதும் பெட்ரோல் டீசல் விலை உயர்த்தப்பட்டதை அடுத்து,

லிட்டருக்கு பெட்ரோலின் விலை 2 ரூபாய் 61 காசுகளும்,

டீசல் விலை 2 ரூபாய் 71 காசுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 107 ரூபாய் 77 காசுகளுக்கும்

டீசல் 99 ரூபாய் 55 காசுகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் பெட்ரோல் டீசல் விலை 4ஆவது முறையாக உயர்த்தப்பட்டுள்ளது.

**************

நீட் நீதிமன்றம்

நீட் வினாத்தாள் கசிவை தொடர்ந்து தன்னிச்சையாகவும், வலுவுடனும் செயலாற்றக்கூடிய புதிய தேர்வு முகமையை ஏற்படுத்துவது குறித்து மத்திய அரசு பதில் அளிக்க உச்சநீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பான மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்ட நீதிபதி P.S. நரசிம்மா மற்றும் அலோக் அராதே ஆகியோர் கொண்ட அமர்வு இவ்விவகாரத்தில் தேசிய தேர்வு முகமையும், மத்திய புலனாய்வு முகமையும் பதில் அளிக்க ஆணை பிறப்பித்துள்ளது.

ஏற்கனவே வினாத்தாள் கசிந்த விவகாரத்திற்கு பின்னரும் தேசிய தேர்வு முகமை பாடம் எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்று நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

எதிர்காலத்தில் நீட் தேர்வை கண்காணிப்பது குறித்து முன்னாள் இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் தேசிய தேர்வு முகமை வரும் வியாழக்கிழமைக்குள் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 3ஆம் தேதி நடத்தப்பட்ட இளநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவு தேர்வு வினாத்தாள் கசிந்த விவகாரத்தால் ரத்து செய்யப்பட்டதைஅடுத்து, 22 லட்சம்

மாணாக்கரின் உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் எதிர்காலத்தில் இவ்வாறு முறைகேடுகள் நடப்பதை தவிர்க்கும் வகையில், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில், உயர்நிலை கண்காணிப்பு குழு அமைக்கவும், இந்த மனுக்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**************

வெங்கட் ரமணன்

தமிழ்நாட்டில் உணவுத்துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் தேர்வாணையம் மூலம் விரைவில் நிரப்பப்படும் என மாநில உணவு அமைச்சர் திரு.வெங்கட் ரமணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் நியாயவிலைக்கடைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய அவ்வப்போது திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

**************

குவாட்

குவாட் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் நாளை நடைபெறுகிறது.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில்,

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் Penny Wong,

அமெரிக்காவின் Marco Rubio

ஜப்பானின் Toshimitsu Motegi, ஆகியோர் பங்கேற்கின்றனர்.

முக்கிய பிரச்சனைகளில் குவாட் நாடுகளின் ஒத்துழைப்பு,

தற்போது மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்களின் முன்னேற்றம்,

பரஸ்பர நலன் சார்ந்த சர்வதேச பிரச்சனைகள் குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

**************

ஹஜ்

ஹஜ் புனித யாத்திரை இன்று தொடங்கியது.

மேற்காசியா பதற்றத்தின் மத்தியிலும் லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் சவுதி அரேபியாவின் மினா நகரில் குவிந்து வருகின்றனர்.

இந்தியாவிலிருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் ஹஜ் யாத்திரையில் பங்கேற்றுள்ளனர்.

இஸ்லாமியர்களின் பாதுகாப்பான வசதியான இலகுவான பயணத்திற்கு மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக சிறுபான்மை இன விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

ஹஜ் சுவிதா செயலி மூலம் யாத்திரிகர்களுக்கு அனைத்து தகவல்களும் சேவைகளும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**************

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 134-வது முறையாக வரும் 31-ம் தேதி உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பொதுமக்கள் 18 00 11 78 00 என்ற இலவச எண், mygov இணையதளம், நமோ செயலி உள்ளிட்டவற்றில் வரும் 29-ம் தேதிவரை தெரிவிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**************

தேர்வுகள்

வரும் 28ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இளநிலை படிப்புகளுக்கான கியூட் பல்கலைகழக பொது நுழைவு தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது,

பக்ரீத் பண்டிகையை ஒட்டி இத்தேர்வு ஒத்திவைக்கப்படுவதாகவும், மறு தேதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CBSE 12ஆம்வகுப்பு மாணாக்கர் விடைத்தாள் நகல் பெறுவதற்கான கால கெடுவை இன்று வரை நீட்டித்திருப்பதாக மத்திய கல்வி வாரியம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ கல்லூரிகளில் இளநிலை படிப்புகளில் சேர, இன்றுமுதல் வரும் 17ஆம் தேதிவரை மாணாக்கர் விண்ணப்பிக்கலாம்.

**************

கொடைக்கானல்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் வனத்துறையின் கீழ் உள்ள சுற்றுலா தலங்களுக்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

இருவரி

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் அம்மா உணவகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

கடலூர், நெல்லிக்குப்பம், பன்ருட்டி, விருதாச்சலம், சிதம்பரம், பகுதிகளில் உள்ள இந்த 6 உணவகங்களும் முதலமைச்சரின் உத்தரவிற்கு ஏற்ப சீரமைக்கப்பட்டு குறைந்த விலையில் சுகாதாரமான உணவுகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் 27ஆம் தேதி நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

வேளாண்மை, நீர்பாசனம், கால்நடை பராமரிப்பு தொடர்பான கோரிக்கைகளை பொதுமக்கள் தெரிவிக்கலாம் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

**************

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் ஏரி குளங்களில் வண்டல் மண், களிமண் ஆகியவற்றை இலவசமாக எடுக்க இணையதளம் மூலம் பதிவு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**************

வானிலை

குமரிக்கடல் பகுதிகளில் வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், ராணிப்பேட்டை, தேனி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**************

செஸ்

நார்வே செஸ் போட்டிகள் ஓஸ்லோவில் இன்று தொடங்குகின்றன.

வரும் 5ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியாவின் குகேஷ்,

பிரக்ஞானந்தா,

திவ்யா தேஷ்முக்,

கொனேரு ஹம்பி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**************

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் தரம்சாலாவில் நாளை நடைபெறும் முதலாவது குவாலிஃபயர் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு – குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது